## சுங்க உத்தியோகத்தர்களது முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியம் - 2013

சுங்க உத்தியோகத்தர்களது முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்தின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமானக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கமைய தயாரித்து நியாயபூர்வமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களற்ற கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, சுங்க உத்தியோகத்தர்களது முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்தின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காலி சுங்க உப அலுவலகத்திற்கெனக் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 104,720 பெறமதியான நிழற்படப்பிரதி இயந்திரம் மீண்டுவருஞ் செலவினத்தின் கீழ் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டில் தவறுதலாக மூலதனமாக்கப்பட்ட சொத்தொன்றும் முற்றாகத் தேய்மானத்திற்குள்ளான சொத்தொன்றும் தொடர்பாக தேய்மானம் மேற்கொள்ளப்பட்டதால் மீளாய்வாண்டிற்கான தேய்மானம் ரூபா 374,817 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) நூலகப் புத்தகத் தேய்மான நிதியேற்பாட்டுக் கணக்கு மீதி ரூபா 97,403 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

#### 2.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1978 டிசெம்பர் 10 ஆந் திகதிய 842 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | நடைமுறையற்ற சொத்துக்களான ரூபா 136,343,215 கூட்டுத்தொகைக்கான நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்படவில்லை. |
| (ஆ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்கத் திறைசேரி சுற்றறிக்கை | கணனித் துணைப்பாகங்களுக்கும் மென் பொருளுக்குமான விரிவான பதிவேடு ஒன்று பேணப்படவில்லை. |

### 2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதியத்திற்கு மாற்றஞ் செய்யப்பட்ட CE/MO/RL/15/2012 ஆம் இலக்க விடயத்திற்கான ரூபா 405,594 மாதாந்தப் பொழிப்பினூடாக திறைசேரிக்கு அறிவிக்கப்படாமையால் திணைக்களப் புத்தகங்களுக்கும் திறைசேரிப் புத்தகங்களுக்குமிடையே ரூபா 405,594 வித்தியாசம் நிலவியது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு மிகை ரூபா 478,770,293 ஆக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 322,866,312 ஆகும். இதனால் ரூபா 155,903,981 அதிகரிப்பு தென்பட்டது. நிதியத்தின் தண்டப்பண வருமானம் மற்றும் பிற வருமானம் என்பன முறையே 94.59 சதவீதத்தாலும் 363.9 சதவீதத்தாலும் முன்னைய ஆண்டிலும் பார்க்க அதிகரித்தமையே நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்கு மூல காரணமாயிற்று.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், நிதியத்தின் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்கான நிதி விளைவுகளது பகுப்பாய்வு கீழே காணப்படுகின்றது.

| வருமானம் / செலவினம் | 2013 ஆம் ஆண்டு | வருமானம் / செலவினத்தின் சதவீதமாக | 2012 ஆம் ஆண்டு | முரண் | முரணின் சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா' 000 | | ரூபா' 000 | ரூபா' 000 | |
| **வருமானம்** | | | | | |
| விற்பனை | 109,869 | 19 | 115,092 | (5223) | (5) |
| தண்டப்பணம் | 479,999 | 81 | 246,677 | 233,322 | 95 |
| பிற வருமானம் | 3,019 | 1 | 651 | 2,368 | 364 |
| மொத்த வருமானம் | 592,887 | 100 | 362,420 | 230,467 | 64 |
| **செலவினம்** | | | | | |
| உள்நாட்டுப் பயிற்சி | 12,063 | 11 | 10,460 | 1,603 | 15 |
| வெளிநாட்டுப் பயிற்சி | 51,314 | 45 | 21,916 | 29,398 | 134 |
| பட்டபின் படிப்பு கற்கை நெறி | 26,107 | 23 | 2,600 | 23,507 | 904 |
| பிற செலவினம் | 24,633 | 22 | 4,578 | 20,055 | 438 |
| மொத்த செலவினம் | 114,117 | 100 | 39,554 | 74,563 | 189 |
| மிகை | 478,770 | | 322,866 | 155,904 | 48 |

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) சுங்கப் பரிசோதனைகளின் மூலம் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களுக்கு விதிக்கப்பட்ட தண்டப் பணம் மற்றும் அவற்றினது விற்பனை வருமாணத்தில் நூற்றுக்கு 50 சதவீதம் வெகுமதிக்கென ஒதுக்கப்பட்டதன் பின்னர் எஞ்சும் தொகையில் நூற்றுக்கு 40 சதவீதம் சுங்க உத்தியோகத்தர்களது முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்தில் செலவு வைக்கப்படும். மீளாய்வாண்டின்போது தண்டப் பணம் மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களது விற்பனையால் பெற்ற வருமானத்திலிருந்து முறையே 81 சதவீதம் மற்றும் 19 சதவீதம் நிதியத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் பட்டபின்படிப்புக் கற்கை நெறிகளும் முறையே ரூபா 51.31 மில்லியன் ரூபா 26.11 மில்லியன் எனச் செலவிடப்பட்டிருந்ததுடன் அது மொத்தச் செலவினத்தில் முறையே 45 மற்றும் 25 சதவீதமாகும்.

(இ) உள்நாட்டுப் பயிற்சிகளுக்காக மொத்தச் செலவினத்தில் 22 சதவீதம் பிற செலவினங்களின் கீழ் செலவிடப்பட்டிருந்த போது முகாமைத்துவ ஆற்றலை முன்னேற்வதற்காக உள்நாட்டுப் பயிற்சிகளுக்கான 11 சதவீதமாகிய குறைந்த கிரயமே பயன்படுத்தப்பட்டிருந்தது. இதற்கமைய, உள்நாட்டுப் பயிற்சி சாதனத்தின் முன்னேற்றத்தின்பால் போதியளவு கவனஞ் செலுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஈ) சுங்க உத்தியோகத்தர்களது ஆற்றலை முன்னேற்றுவதற்காக உள்ளூர் மற்றும் வெளிநாட்டு செலவுகளில் ஈடுபடும் போது விபத்துக்களுக்கு ஆளாகும் உத்தியோகத்தர்களுக்கு இழப்பீடு வழங்குதல் இந் நிதியத்தின் பிரதான நோக்கங்களாகும். எவ்வாறாயினும், சுங்க முகாமைத்துவ ஆற்றலை முன்னேற்றுதல் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பாக குறித்தவொரு அளவுகோலை இனங்காணாது இந்நிதியத்திற்கான நிதியேற்பாட்டை மேற்கொள்வதனால் நிதியத்தின் திரண்ட மீதி வருடாந்தம் அதிகரித்துள்ளது. இதற்கமைய 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,410 மில்லியனாக இருந்த திரண்ட நிதியத்தின் மீதி 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,889 மில்லியன் ஆகியதுடன் அது ரூபா 479 மில்லியன் அதிகரிப்பாகும்.

### 4.2. முகாமைத்துவ வினைத்திறமையின்மை

வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வெளிநாட்டுச் செயலமர்வுகள் என்பவற்றில் பங்குபற்றும் உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்கையில் அது தொடர்பாகத் தெளிவான அளவு கோல்கள் எதுவும் இனங்காணப்படாதிருப்பதால் மீளாய்வாண்டில் நடைமுறைகள் எதனையும் கடைப்பிடிக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. இச் சந்தர்ப்பங்களில் நடைபெற்ற இரண்டு செயலமர்வுகளுக்கு உத்தியோகத்தர்கள் முறையற்றவாறு நியமிக்கப்பட்டிருந்தனர்.

### 4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

மிளாய்வாண்டின் போது 5 சந்தர்ப்பங்களில் ரூபா 6,058,478 கூட்டுத்தொகையுடைய செலவினம் ஒதுக்கீட்டுச் செலவினத் தலைப்பு மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் இச் செலவினம் நிதியத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாகப் பதிலளித்த சுங்கப் பணிப்பாளர் நாயகம் வினைத்திறமையின்மை மேம்படுத்துவதன் மூலம் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கே குறித்த செலவினம் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறியிருந்தார்.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2006 டிசெம்பர் 22 ஆந் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கை இலக்கம் பீஎப்/423 இற்கமைய நிதியத்தின் வருடாந்த செயற்திறன் அறிக்கையும் நிதிக்கூற்றுக்களும் கணக்காண்டு முடிவுற்று 2 மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும் மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்கள் 2014 மே 02 ஆந் திகதியன்றுதான் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வரவு, செலவுத் திட்டத்தின் மூலம் அங்கீகாரமளிக்கப்படாத 4 செலவின விடயங்களுக்கு நிதியத்தால் ரூபா 14,778,674 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது செலவின விடயங்களுக்கு மதிப்பீட்டுச் செலவினத்திலும் கூடுதலாக ரூபா 102,777,090 செலவிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது உள்ளவாறான வருமானம்/செலவினம் மற்றும் பாதீட்டு, வருமானம்/செலவினம் என்பவற்றுக்கிடையே 100 சதவீதம் வரையிலான வேறுபாடுகள் மூன்று சந்தர்ப்பங்களில் அவதானிக்கப்பட்டதன் காரணமாக பாதீடானது சட்டபூர்வத் தேவைகளால் பூர்த்தி செய்வதற்காகத் தயாரிக்கப்படுகின்றதேயன்று, ஆக்கபூர்வமான நிதிக்கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) திணைக்களத்தின் மூன்று செலவின விடயங்களில் ஏற்பாடு செய்யப்பட்ட நிதியிலும் கூடுதலாக ரூபா 93.3 மில்லியன் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

(உ) 2006 டிசெம்பர் 22 ஆந் திகதிய PF/423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், வருடாந்த வரவு, செலவுத் திட்டம் அதற்கு முன்னயை ஆண்டின் செப்தெம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட வேண்டுமாயினும் மீளாய்வாண்டினது வரவு, செலவுத்திட்டம் 07 மாத தாமதத்தின் பின்னர் 2013 ஏப்ரல் 17 ஆந் திகதியன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் கவனதத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) சுங்க உத்தியோகத்தர்களது முகாமைத்து ஆற்றலை மேம்படுத்துவதற்கான அளவுகோல்கள் இனங்காணப்படல்
(ஆ) நிலையான சொத்துக்கள்
(இ) நிதியப் பயன்பாடு
(ஈ) இணக்க நடவடிக்கைகள்
(உ) வெளிநாட்டு பயணச் செலவினம்
(ஊ) வரவு, செலவுத்திட்டம்
(எ) கணக்கீடு